## பாரதிதாசனின் பகுத்தறிவுப் பார்வை

### 4.0 பாட முன்னுரை

பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் என்று பாராட்டப்படுகிறார். புரட்சி என்பது மாறுபட்ட சிந்தனையை வெளிப்படுத்தும் செயல் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நிலவிய சாதிக் கொடுமை, சமயச் சண்டை, அறியாமை, மூடப்பழக்க வழக்கம் முதலியவற்றுக்கு எதிராகத் தமது பகுத்தறிவுக் கருத்துகளைப் பாரதிதாசன் பாடியுள்ளார். எனவேதான், அவர் புரட்சிக் கவிஞர் என்று போற்றப்படுகிறார். அறியாமையில் மூழ்கி இருந்த மக்களுக்கு அடிப்படை அறிவைக் கொடுக்க எண்ணினார் பாரதிதாசன். அதன் பின்னர் அவர்களைப் பகுத்து அறியும் சிந்தனை உடையவர்களாக உயர்த்த எண்ணினார். ஆகவே, தமது பாடல்களில் எங்கு எல்லாம் பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்த முடியுமோ அங்கு எல்லாம் பாரதிதாசன் புகுத்தி உள்ளார்.

- பகுத்தறிவு

அறிவுக்குப் பொருந்தாத கருத்துகளை மறுப்பதும் அறிவுக்குப் பொருந்தும் கருத்துகளை ஏற்பதும் பகுத்தறிவு ஆகும். இந்தச் சிந்தனை உடையவர்களைப் பகுத்தறிவாளர்கள் என்கிறோம்.

### 4.1 சாதி

அறிவுக்குப் பொருந்தாத ஒன்று சாதி ஆகும். மனித சமுதாயத்தை ஒரே குலமாகப் பார்க்கும் பண்பு கொண்டவர்கள் தமிழர்கள். உலக மக்கள் இடையே எந்தப் பிரிவும் இல்லை என்ற எண்ணம் கொண்டு அவர்கள் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு உலக மக்களை ஒன்று என்று கருதினாலும் ஆட்சி நிர்வாகத்திற்காக உலகில் பல நாடுகள் பிரிந்துள்ளன. அவற்றுள் மொழி அடிப்படையில் பல இனங்கள் உள்ளன. இந்தப்

பிரிவுகளுக்கு நிர்வாக நோக்கம் இருப்பதை நாம் அறிய முடிகிறது. ஆனால், இந்தச் சாதிப்பிரிவிற்கு நம்மால் எந்த நல்ல நோக்கத்தையும் அறிய இயலவில்லை. ஆகவே சாதியை அறிவுக்குப் பொருந்தாது என்று பாரதிதாசன் கூறியுள்ளார்.

உலகினில் சாதிகள் இல்லை-என்
உள்ளத்தில் வேற்றுமை இல்லை
கலகத்தைச் செய்கின்ற சாதி-என்
கைகளைப் பற்றி இழுப்பதும் உண்டோ?

(காதல் பாடல்கள், ‘அவள் அடங்காச் சிரிப்பு’ - 3)

என்று கேள்வி கேட்டு, ஒரு பெண்ணின் வாய்மொழியாக இந்த உலகில் சாதி இல்லை என்று பாரதிதாசன் பாடியுள்ளார்.

### 4.1.1 சாதி நீக்குவது தமிழர் கடமை

தமிழ் மக்கள் தங்களிடையே இருக்கும் சாதி உணர்வை ஒழிக்கவேண்டும். அவ்வாறு ஒழிக்காமல் உயர்வு, தாழ்வு சொல்லித் திரிவது மடமை ஆகும் என்பதைப் பாவேந்தர் உணர்த்த எண்ணினார். எனவே,

பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை - இந்தப்
பிழை நீக்குவதே உயிர் உள்ளாரின் கடமை

(பாரதிதாசன் கவிதைகள், 60, சகோதரத்துவம் - 1)

என்று தமிழர்களின் கடமையை உணர்த்தியுள்ளார்.

இந்தக் கடமையை உணராமல் மேலும், சாதி வளர்ப்பவர்களைப் பார்த்துப் பாரதிதாசன் கேள்வி கேட்கிறார் பாருங்கள்.

மாந்தரில் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா?

(பாரதிதாசன் கவிதைகள் 50. ஆய்ந்துபார் - 1)

என்று கேட்கும் கேள்விக்கு நாம் என்ன பதில் சொல்வோம்? ‘மக்கள் ஒரே குலமாய் வாழ்வதுதான் சரி’ என்றுதானே சொல்வோம்.

பாவேந்தர், எந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறாரோ அந்தக் கருத்தை நம் வாயால் வர வைக்கும் திறத்தை இந்தப் பாடலில் வெளிப்படுத்தியிருக்கிறார் பார்த்தீர்களா?

### 4.1.2 ஐந்து சாதிகள்

முதலில் நான்கு பிரிவுகள் மட்டுமே நம்மிடையே புகுத்தப்பட்டன. அவை வேதியர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பவை ஆகும். இந்த நான்கு சாதிகளுக்கும் அப்பால் ஐந்தாம் சாதியாகப் ‘பஞ்சமர்’ என்று ஒரு பிரிவையும் உருவாக்கி விட்டார்கள். இன்று அப்பிரிவுகள் பலநூறு சாதிகளாக வளர்ந்து விட்டன. இந்தச் சாதிகளுக்கு அடிப்படை யார்? என்ற கேள்வி இப்போது நம்மிடம் தோன்றுகிறது அல்லவா? பாரதிதாசனே சொல்கிறார் பாருங்கள்.

வேதம் உணர்ந்தவன் அந்தணன் - இந்த
மேதினியை ஆளுபவன் சத்திரியனாம் - மிக
நீதமுடன் வைசியன் என்று உயர்வு செய்தார் - மிக
நாதியற்று வேலைகள் செய்தே - முன்பு
நாத்திறம் அற்றிருந்தவன் சூத்திரன் என்றே - சொல்லி
ஆதியினில் மனு வகுத்தான் - இவை

அன்றியும் பஞ்சமர்கள் என்பதும் ஒன்றாம்

(பாரதிதாசன் கவிதைகள் 3, ஞாயமற்ற மறியல் 6)

(**நீதமுடன்** = நீதியுடன், **நாதியற்று** = உதவியில்லாமல்,
**நாத்திறம்** = வாதாடும் திறமை, **ஆதியினில்** = பழங்காலத்தில்)

என்று இந்த வருணப் பாகுபாட்டை முதலில் மனு என்பவர் வகுத்ததாகப் பாரதிதாசன் தெரிவித்துள்ளார். (வருணம் - நிறம், நிறம் அடிப்படையில் உண்டானபிரிவு) இந்தச் சாதிப்பிரிவு உலகநாடுகளில் எல்லாம் உள்ளதா? அல்லது நம் இந்திய நாட்டில் மட்டுமே உள்ளதா? என்ற கேள்விக்குப் பதிலாகப் பாரதிதாசன்,

தீண்டாமை என்னும் ஒருபேய் - இந்தத்
தேசத்தில் மாத்திரமே திரியக் கண்டோம் - எனில்
ஈண்டு பிறநாட்டில் இருப்போர் - செவிக்கு
ஏறியதும் இச்செயலைக் காறி உமிழ்வார்

(பாரதிதாசன் கவிதைகள் 3, ஞாயமற்ற மறியல் - 3)

(**காறி உமிழ்தல்** = எச்சிலைச் சேர்த்துக் கோபத்துடன் துப்புதல்)

என்று பாடியுள்ளார். இந்தப் பாடல் மூலம் தீண்டாமைக் கொடுமை இந்தியாவில் மட்டுமே உள்ளது என்று பதில் தந்துள்ளார். இந்தக் கொடுமையைப் பிறநாட்டைச் சேர்ந்தவர்கள் அறிந்தால் நம்மை உமிழ்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார். பகுத்தறிவுக்குப் பொருந்தாத இந்தச் சாதிப்பிரிவை ஏன் இந்தியாவில் நாம்

வைத்திருக்க வேண்டும், என்ற கேள்வி எழுகிறது அல்லவா? இதற்கும் பாரதிதாசன் தமது பாடல் வழியே பதில் சொல்லியிருக்கிறார்.

சாதிப்பிரிவு செய்தார்
 தம்மை உயர்த்துதற்கே
நீதிகள் சொன்னாரடி-சகியே
 நீதிகள் சொன்னாரடி

(பாரதிதாசன் கவிதைகள் 3, சமத்துவப்பாட்டு - 45)

என்று தம்மை மேலும் உயர்த்திக் கொள்வதற்காகத்தான் சாதிப்பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளார்கள். தாங்கள் வகுத்த சாதிப்பிரிவுகளுக்கு ஏற்ப அவர்கள் நீதியையும் வகுத்துக் கொண்டார்கள் என்றும் பாரதிதாசன் பாடியுள்ளார்.

### 4.1.3 தமிழர்க்குச் சாதி இல்லை

தமிழ் மக்களுக்குச் சாதி கிடையாது. அவர்கள் அனைவரும் தமிழர்கள் என்ற இன வரையறைக்கு உட்பட்டவர்கள். ஆனால், தற்காலத் தமிழர்களிடம் சாதி வேரூன்றி விட்டது. இதைப் போக்க எண்ணிய பாரதிதாசன் தமிழர்களுக்குச் சாதி இல்லை என்ற உண்மையை,

மிக்கு உயர்ந்த சாதி, கீழ்ச்சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை
பொய்க் கூற்றே சாதி எனல்

(பாரதிதாசன் கவிதைகள் - கடல்மேல் குமிழிகள் : 26)

என்று உணர்த்தியுள்ளார். மேலும், தமிழர்க்குச் சாதி உண்டு என்று கூறுவது பொய்க்கூற்று என்பதையும் வெளிப்படுத்தி உள்ளார். மனிதர்களில் சாதியாலோ வேறு காரணங்களாலோ உயர்வும் இல்லை; தாழ்வும் இல்லை என்ற நிலை வரவேண்டும். அப்போது மனித வாழ்க்கையானது இன்பத்தின் எல்லையாக விளங்கும் என்பதை

தாழ்வில்லை உயர்வில்லை
சமமென்ற நிலைவந்தால்
வாழ்வெல்லை காண்போமடி - சகியே
வாழ்வெல்லை காண்போமடி

(பாரதிதாசன் கவிதைகள் - 3, சமத்துவப்பாட்டு - 109)

என்ற பாடல் வரிகளின் வழியாகப் பாரதிதாசன் தெரிவித்துள்ளார். சாதிப் பற்றுக் கொண்ட தமிழர்கள் தமிழ் மொழியைத் தமது மொழியாகவும் உயர்ந்த மொழியாகவும் கருதுவது இல்லை. சாதிவெறி கொண்ட தமிழ் இளைஞர்களால் தமிழ் எழுச்சிக்காகப் போரிட இயலாது. எனவே தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தமிழர்களிடம் சாதிப் பற்று இருக்கக் கூடாது என்பதனைப் பாரதிதாசன் பின்வருமாறு பாடியுள்ளார்.

சாதி களைந்திட்ட ஏரி - நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே - நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்

(பாரதிதாசன் கவிதைகள் - 2, 25, பாரதி உள்ளம் -1)

இந்தப் பாடலில் பாரதிதாசன் சமுதாயத்தை ஏரியாக உருவகம்

செய்து உள்ளார்; தமிழை நீராக உருவகம் செய்துள்ளார். சாதி இல்லாத சமுதாயம் அமைந்தால் அது தமிழை உயர்த்தும் என்ற உண்மையை உணர்த்துவதற்கு இவ்வாறு உருவகப்படுத்தி உள்ளார்.

### 4.1.4 சாதிகள் ஒழியும் வழி

தமிழ்ச் சமுதாயத்தை விட்டுச் சாதிகள் ஒழிய வேண்டும் என்றால் கலப்புத் திருமணம் பெருக வேண்டும் என்ற கருத்தைப் பாரதிதாசன் தெரிவித்து உள்ளார். ஆனால், இந்தக் கலப்புத் திருமணத்தைச் சமுதாயம் உடனே ஏற்றுக் கொள்ளும் என்று நம்ப இயலாது. ஏனெனில், இந்தச் சமுதாயம் சாதியில் ஊறிப் போனது. எனவே, இதற்கு எதிர்த்து நின்று போராடும் உணர்வு வேண்டும் என்று பாரதிதாசன் பாடியுள்ளார். கலப்புத் திருமணம் செய்ய விரும்பும் பெண்ணும் அவளது தந்தையும் உரையாடுவது போல் பாரதிதாசன் தமது காதல் பாடல்களில் பாடியுள்ளார். மகளது கலப்புத் திருமணத்தை எதிர்த்துப் பேசும் தந்தையார்,

நமது சாதி வேறு நல்லோய்
அவனது சாதிவேறு என்று அறிகிலாய்
என்று சினத்தைச் சொல்லில் ஏற்றினான்

(காதல் பாடல்கள், ‘கலப்புமணம் வாழ்க’ - 2)

என்று கூறுகிறார். அதைக் கேட்ட மகள்,

அப்பா! உண்மையில் அவரும் என்போல்
மனிதச் சாதி, மந்தி அல்லர்;
காக்கை அல்லர்; கரும்பாம்பு அல்லர்

(காதல் பாடல்கள், ‘கலப்பு மணம் வாழ்க’ -2)

என்று கேலியாகக் கூறுகிறாள். அதைக் கேட்ட அவளது தந்தை,

மனிதரில் சாதி இல்லையா மகளே

(காதல் பாடல்கள், ‘கலப்பு மணம் வாழ்க’ - 2)

என்று கேட்கிறார். அதற்கு மகள்,

சாதி சற்றும் என்நினைவில் இல்லை
மாது நான் தமிழனின் மகள்ஆதலாலே

(காதல்பாடல்கள், கலப்பு மணம் வாழ்க - 3)

என்று பதில் சொல்கிறாள். இந்த உரையாடலில் தந்தையார் முதலில் தனது மகளைப் பார்த்துக் கோபமாகக் கேட்பதுபோல் பாரதிதாசன் பாடியுள்ளார். கலப்பு மணம் செய்து கொள்ள விரும்பும் மகளும் சற்றும் விட்டுக் கொடுக்காமல் எள்ளலுடன் (கேலியுடன்) பதில் சொல்வதுபோல் பாரதிதாசன் அமைத்து உள்ளார். இந்தப் பகுதியின் தொடக்கத்திலிருந்து கலப்புத் திருமணத்தை, வெற்றியை நோக்கி வளர்த்துக் கொண்டு வந்து முடித்துள்ள தன்மை சிறப்பு உடையது ஆகும்.

### 4.2 மதம்

நம் நாட்டில் பல மதங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கொள்கைகள் உள்ளன. அந்தக் கொள்கைகளை வலியுறுத்துவதற்காக அறிவுக்குப் பொருந்தாத பல கருத்துகளை அவை பரப்புகின்றன. மதங்களின் இந்த நிலையை - பகுத்தறிவுக்குப் பொருந்தாத நிலையைப் பாரதிதாசன் வெறுக்கிறார். எனவே, மதங்கள் வளர்வது மக்களுக்கு நல்லது அல்ல என்று கருதிய

பாரதிதாசன்,

மதம் வளர்ந்தால்
படுபாழாம் பகுத்தறிவு

(குறிஞ்சித்திட்டு : பக். 136)

என்று பாடியுள்ளார். அறிவை அழிப்பதாலேயே மதங்களை வேண்டாம் என்று எண்ணிய பாரதிதாசன், 'குறிஞ்சித்திட்டு' என்ற கற்பனை நாடு ஒன்றைப் படைக்கிறார் அந்நாடு நன்றாக இருப்பதற்குக் காரணம்.

மதமில்லை குறிஞ்சித் திட்டில்
மதம் பெற்ற சாதி இல்லை

(குறிஞ்சித்திட்டு : ப. 6)

என்று பாடியுள்ளார்.

### 4.2.1 மனிதனை அழிக்கும் மதம்

மனிதனை மனிதத் தன்மையிலிருந்து கீழ் இறக்குவது மதம். இதை விளக்குவதற்குப் பாரதிதாசன்,

மத ஓடத்தில் ஏறிய மாந்தரே - பலி
பீடத்திலே சாய்ந்தீரே

(பாரதிதாசன் கவிதைகள், 59 பலிபீடம்)

என்று பாடியுள்ளார். இப்பாடலில் மதத்தைப் பலிபீடமாக உருவகம் செய்து பாடியுள்ளார் பாரதிதாசன். மேலும் ஓடத்தின் செயலாகிய

சாய்தலை, மதத்தின் பிடியில் சிக்கியுள்ள மனிதர்களுக்கு உருவகம் செய்து உள்ளார். இவ்வாறு இரண்டு வரிகளில் உருவக அழகை வெளிப்படுத்தியுள்ளார் பாரதிதாசன்.

மூடத்தனத்தை முடுக்கும் மதத்தைநிர்
மூலப்படுத்த கை ஓங்குவீர் - பலி
பீடத்தை விட்டுஇனி நீங்குவீர் - செல்வ
நாடு நமக்கு என்று வாங்குவீர்

(பாரதிதாசன் கவிதைகள், 59 பலிபீடம்)

என்னும் வரிகளில் மூடத்தனத்தை வளர்ப்பதற்கு மதமே காரணம் என்னும் கருத்தை எடுத்துக் கூறியுள்ளார். இனிமேலாவது பலிபீடத்தை விட்டு நீங்குங்கள் என்று மதத்திலிருந்து மக்களை விலக்குவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். மதம் என்பது கருங்கல் போன்றது. அதில் மல்லிகைக் கொடி வளர்ந்து மல்லிகைப் பூக்களைத் தருவது இல்லை என்ற கருத்தைப் பாரதிதாசன்,

மதம் என்ற கருங்கல் பாங்கில்
மல்லிகை பூப்பது இல்லை

(குறிஞ்சித்திட்டு, பக். 115)

என்று பாடியுள்ளார்.

மதத்தைக் கருங்கல் என்று கூறிய பாரதிதாசன் அதே பொருள் கொண்ட சமயத்தைச் சூளை என்று கூறியுள்ளார்.

சமயம் எனும் சூளையிலே

தமிழ் நட்டால் முளையாது

(தமிழியக்கம் : 20)

என்னும் பாடலில் சமயத்தைச் செங்கல் சூளையாகப் பாடியுள்ளார். செங்கல் சூளையில் வெப்பம்தான் இருக்கும். இந்த வெப்பத்தில் தமிழாகிய பயிரை நட்டால் அது முளைக்காது என்று எடுத்துக் கூறியுள்ளார்.

### 4.2.2 சாதி வளர்க்கும் மதங்கள்

ஆயிரக்கணக்கான சாதிகள் நமது நாட்டில் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் மதம்தான் காரணம் என்கிறார் பாரதிதாசன். இவ்வாறு வளர்க்கப்பட்ட சாதிகளுக்கிடையே சண்டையை மூட்டி விடுவதும் மதம்தான் என்பதையும் அவர் அழகாகப் பாடியுள்ளார்.

ஆயிரம் சாதிகள் ஒப்பி – நரி
அன்னவர் காலிடை வீழ்ந்து
நாய்களைப் போல் தமக்கு உள்ளே–சண்டை
நாளும் வளர்க்கும் மதங்கள்

(பன்மணித்திரள், பக். 147)

என்று சாதிச்சண்டை போடுவது, நாய்கள் தமக்குள்ளே சண்டை போடுவதுபோல் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். இதில் மதத்தைச் சாதிகளின் வேராகப் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு சாதிச்சண்டைக்கு வேராக விளங்கும் மதம் பொய்யானது, போலியானது என்பதைப் பெண்குழந்தைத் தாலாட்டு என்னும்

பாடலில் குறிப்பிட்டு உள்ளார். மதத்தின் பொய்மையைப் பற்றி

யாருக்கு எடுத்துக் கூறுவது என்று எண்ணிப்பார்த்தார் பாரதிதாசன். வளர்ந்தவர்களுக்குக் கூறிப் பயனில்லை. அவர்கள் தம்போக்கை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். எனவே குழந்தைக்குப் பாடும் தாலாட்டில் வலிமைமிக்க சீர்திருத்தக் கருத்துகளைச் சேர்த்துப் பாடியுள்ளார். அதுவும் பெண் குழந்தைக்குப் பாடும் தாலாட்டில் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

புண்ணில் சரம்விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணில் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவளே
(பாரதிதாசன் கவிதைகள்,42 பெண்குழந்தைத்தாலாட்டு - 10)

என்று ‘மதத்தின் பேரால் கூட்டம் சேர்ப்போரைத் தம் கண்ணில் சிந்தும் கோபக்கனலால் கட்டழிக்க வந்த பெண்ணே’ என்று பெண் குழந்தையைப் பாராட்டுகிறார் பாரதிதாசன்.

### 4.2.3 மதவாதிகள்

மதங்களின் பெயரைச் சொல்லிக் கொடுமைகள் செய்பவரை மதவாதிகள் என்று பாரதிதாசன் சுட்டிக் காட்டியுள்ளார். அவர்கள், தமிழர்களின் பணத்தைப் பறிப்பதிலேயே குறிக்கோளாய் இருப்பவர்கள் என்பதை,

வாதனை சொல்லி வணங்கி நின்றால் தெய்வ
சோதனை என்று அவர் சொல்லுவார் - பணச்
சாதனையால் உம்மை வெல்லுவார் - கெட்ட
போதனையால் தினம் கொல்லுவார்
(பாரதிதாசன் கவிதைகள், 59 பலிபீடம் - 5)

என்று பாடியுள்ளார். இந்த மதவாதிகள் ஏமாளிகளை ஏமாற்றுவார்கள்; இளைத்தவர்களை மிரட்டுவார்கள் என்னும் உண்மையை அறிந்தவர் பாரதிதாசன். எனவே,

மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே

(பாண்டியன் பரிசு இயல் 56)

(**மருட்டுகின்ற** = மயக்குகின்ற)

என்று வருத்தப்பட்டுப் பாடியுள்ளார். இத்தகைய மதவாதிகள் உண்மையைப் பொய் என்று கூறுவார்கள்; திருடரைச் சாமி என்று கூறுவார்கள்; மூடத்தனத்தைப் பரப்புபவர்களைப் பாவலர் என்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

விழித்திருக்கும் போதிலேயே - நாட்டில்
விளையாடும் திருடரை ‘சாமி’ என்கின்றார்.
அழியாத மூடத்தனத்தை - ஏட்டில்
அழகாய் வரைந்திடும் பழிகாரர் தம்மை
முழுது ஆய்ந்த பாவலர் என்பார் - இவர்
முதல் எழுத்து ஓதினும் மதி இருட்டாகும்

(பாரதிதாசன் கவிதைகள், 49 மாண்டவன் மீண்டான் -5)

இத்தகைய மதவாதிகளிடம் தமிழர்கள் விழிப்பாய் இருக்கவேண்டும் என்று பாரதிதாசன் உணர்த்தியுள்ளார்.

### 4.3 மூடநம்பிக்கை

அறிவற்ற செயல்களில் நம்பிக்கை கொண்டு வாழ்வது மூடநம்பிக்கை. இந்த மூட நம்பிக்கைக்கு எதிராகப் பாட்டுக்குரல்

கொடுத்துள்ளார் பாரதிதாசன்.

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே

(பாரதிதாசன் கவிதைகள், 42 பெண்குழந்தைத் தாலாட்டு - 8)

மூடத்தனம் மக்களிடம் தொடர்ந்து வந்து தேங்கியுள்ளது. எனவே அது முடைநாற்றம் வீசுகிறது என்று இந்தப் பாடலில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். இந்த முடைநாற்றம் போகவேண்டும் என்றால் நம்மை விட்டு மூடத்தனம் அகலவேண்டும். அதன் பின்னர் அங்கே பகுத்தறிவு தோன்றும். இதைப் பெண் குழந்தைத் தாலாட்டில் பாரதிதாசன் பாடியுள்ளார். பெண்களிடம் காணப்படுகின்ற மூடத்தனத்தைப் பெண்களே போக்க முன்வரவேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்று பெண்குழந்தையை நோக்கிப் பாடியுள்ளார் பாரதிதாசன்.

### 4.3.1 பேடி வழக்கங்கள்

பேடி என்பது ஆணும் பெண்ணும் இல்லாத மனிதனைக் குறிக்கும் சொல். இந்தப் பேடியால் மனித இனத்தை உருவாக்க இயலாது. அதுபோல் அறிவுக்குப் பொருந்தாத பேடி வழக்கங்களால் அறிவு நிறைந்த சமுதாயத்தை உருவாக்க இயலாது என்கிறார் பாரதிதாசன்.

பேடி வழக்கங்கள் மூடத்தனம் - இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்

(பாரதிதாசன் கவிதைகள் 11, மாந்தோப்பில் மணம் - 9)

(**பீடை** = (மூடத்தனமாகிய) தீமை)

என்று மூடத்தனத்தைப் பீடைகள் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த மூட வழக்கங்களையே நாம் சாத்திரம் என்று போற்றுகிறோம். இவற்றைப் பின்பற்றும் சமுதாயம் எவ்வாறு புதுமைகளை ஏற்றுக் கொள்ளும்? எனவே தான், விதவைகள் மறுமணத்தைப் பெண்களே எதிர்க்கிறார்கள் என்கிறார் பாரதிதாசன்.

**புற்றரவு ஒத்தது தாயர் உள்ளம் - அங்கு,**
**புன்னகை கொண்டது மூடத்தனம்**

**(பாரதிதாசன் கவிதைகள், 13 காதல் குற்றவாளிகள் - 6)**

கணவனை இழந்த மகள், மறுமணம் செய்து கொள்ள விரும்புவதைத் தடுக்கும் தாயின் உள்ளத்தைப் புற்றில் குடிகொண்ட பாம்பைப் போல் கொடியது என்கிறார் பாரதிதாசன்.

### 4.3.2 மூடநம்பிக்கைக்கு அஞ்சாதீர்

விதவை மணத்தை எதிர்ப்பவர்களைக் கண்டு நாம் அஞ்ச வேண்டாம். அதுவும் காதல் வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகிறவர்கள் மூடநம்பிக்கையைக் கண்டு அஞ்ச வேண்டாம்.எதிர்த்து நில்லுங்கள் என்கிறார்.

**காதல் என்னும் மாமலையில் ஏறிநின்றீர்**
**கடுமூட வழக்கத்துக்கு அஞ்சலாமோ?**

**(காதல் நினைவுகள். பக். 21)**

என்று காதலர்களைப் பார்த்துக் கேள்வி கேட்கிறார். அச்சத்துக்கு

எது காரணமாக இருக்கிறது? என்ற கேள்வியை எழுப்பி, மடமைதான் அச்சத்தின் வேர் என்கிறார் பாரதிதாசன். அறியாமை உடையவர்களே அச்சத்தில் துன்பப்படுகிறார்கள் என்ற கருத்தை,

**மடமைதான் அச்சத்தின் வேராம் - அந்த**
**மடமையால் விளைவதே போராம்**

(இசையமுது பக். 54)

என்று பாடியுள்ளார்.

### 4.3.3 நம்பிக்கை

மூடநம்பிக்கையை எதிர்ப்பவர்கள் நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். அப்போதுதான் அவர்களால் வெற்றிப் பாதையில் செல்ல முடியும் என்று கருதிய பாரதிதாசன், இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் பாடல்களைப் பாடியுள்ளார்.

**மானிடம் என்றொரு வாளும் - அதை**
**வசத்தில் அடைந்திட்ட உன்னிரு தோளும்**
**வானும் வசப்பட வைக்கும் - இதில்**
**வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்**

(பாரதிதாசன் கவிதைகள், 51 மானிடசக்தி - 1)

என்று மானிட வாழ்வின் பெருமையையும் தோள் வலிமையையும் எடுத்துக் காட்டியுள்ளார் பாரதிதாசன். உலகில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. இவை எவற்றிற்கும் இல்லாத சிறப்பாகிய பகுத்தறிவை மனிதன் மட்டுமே பெற்றுள்ளான். அந்தப் பகுத்தறிவைப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும்

என்று நம்பிக்கை ஊட்டுகிறார் பாரதிதாசன்.

மானிடருக்கு இனிதாக - இங்கு
வாய்ந்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் நீபார் - வாழ்வின்
வல்லமை 'மானிடத்தன்மை' என்றே தேர்

(பாரதிதாசன் கவிதைகள் 51, மானிடசக்தி -3)

(**தேர்** = அறிந்துகொள்)

என்று நமது வாழ்க்கைக்கு மானிடத் தன்மைதான் வலிமை சேர்க்கும் என்பதை விளக்கியுள்ளார். மனிதர்களில் சிலர் தங்களை அடிமைகளாய் நினைத்துக் கொண்டு கூனிக் குறுகி வாழ்வதைக் கண்ட பாரதிதாசன் அவர்களுக்கும் நம்பிக்கை ஊட்டியுள்ளார்.

மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்அன்று
இமைதிற எழுந்து நன்றாய் எண்ணுவாய்
தோளை உயர்த்துச் சுடர்முகம் தூக்கு
மீசையை முறுக்கி மேலே ஏற்று

(பாரதிதாசன் கவிதைகள் 54, உலகம் உன்னுடையது)

என்னும் பாடல் வரிகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் நம்பிக்கையுடன் பகுத்தறிவுப் பாதையில் செல்வார்கள். அந்த அளவிற்கு வீரத்தைக் கலந்து பாடியுள்ளார் பாரதிதாசன்.

### 4.3.4 பகுத்தறிவு

நம்பிக்கை வளர்ந்த நெஞ்சில் பகுத்தறிவு தோன்றும். அந்தப் பகுத்தறிவு நமது எதிர்காலத்தை வளம் உடையதாக ஆக்கும் பச்சை

விளக்கு. அந்த விளக்கின் துணையுடன் பகுத்தறிவுச் சமுதாயத்தைப் படைக்கக் கருதியுள்ளார் பாரதிதாசன்.

பச்சை விளக்காகும் - உன்
பகுத்தறிவு தம்பி!
பச்சை விளக்காலே - நல்ல
பாதைபிடி தம்பி

(பாரதிதாசன் கவிதைகள் - 3, ஏற்றப்பாட்டு, 77,78)

என்று இளைஞர்களுக்கு வழிகாட்டியுள்ளார். இளைஞர்கள் நடந்து செல்லும் பாதையில் மதம் என்னும் முள் படர்ந்திருக்கும். இந்த மதமாகிய முள்ளை அகற்றுவதற்குப் பகுத்தறிவுதான் துணை என்பதை,

மதமெனும் முள்ளுப் படர்ந்திருக்கும்
வழிக்கெல்லாம் பகுத்தறிவே துணை ஆகும்

(தேனருவி - 103)

என்று பாரதிதாசன் பாடியுள்ளார். இவ்வாறு பாரதிதாசன் தெரிவித்த பிறகும் பகுத்தறிவைப் பின்பற்றாத மக்களைப் பார்த்து,

பாழ்படும் பழமை சூழ்வது திறமா?
பகுத்தறிவால் நலம் வகுப்பது திறமா?

(பாரதிதாசன் கவிதைகள் 50, ஆய்ந்துபார் - 9)

என்று கேள்வி கேட்டு, சிந்தனையைத் தூண்டியுள்ளார். மனித சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்றால்

நாளிதழ்களும் வார இதழ்களும், மாத இதழ்களும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புதல் வேண்டும். அவ்வாறு பரப்பாமல் மூடநம்பிக்கையைப் பரப்பும் இதழ்களால் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த இயலாது.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது

(பாரதிதாசன் கவிதைகள் 1,
சஞ்சீவி பர்வதத்தின் சாரல். பக்.14)

(**எள்** = எள் என்னும் சிறிய தானியம்)

என்று ஆணித்தரமாகப் பாரதிதாசன் பாடியுள்ளார்.

### 4.4 சுயமரியாதை

மனிதன் தனக்கு இருக்கும் மதிப்பை உணர்ந்து செயல்படுதல் சுயமரியாதை ஆகும். தன்மதிப்பை உணர்ந்த மனிதர்களின் வாழ்க்கை பகுத்தறிவை ஏற்றுக் கொள்ளும். தன்மதிப்பை உணராத மனிதர்களின் வாழ்க்கை மூடநம்பிக்கையில் மூழ்கிவிடும்.

சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
    தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
    ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
    பேசு சுயமரியாதை உலகெனப் பேர்வைப்போம்
ஈதேகாண் சமூகமே யாம் சொன்னவகையில்
    ஏறு நீ! ஏறு நீ! ஏறு நீ! ஏறே

(பாரதிதாசன் கவிதைகள், 52 முன்னேறு - 1)

(**ஊதை** = வாடைக்காற்று)

என்னும் பாடலில் சுயமரியாதை உடையவர்கள் சாதியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; மதத்தை ஒதுக்கி விடுவார்கள்; மூடநம்பிக்கையில் வீழமாட்டார்கள் என்று பாரதிதாசன் பாடியுள்ளார். மேலும் இத்தகைய சுயமரியாதை கொண்டவர்கள் நிறைந்ததுதான் சமூகம் என்று இளைஞர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

### 4.4.1 உயர்வுக்குச் சுயமரியாதை

மனிதன் தனது வாழ்வில் உயர வேண்டும் என்றால் சுயமரியாதையுடன் வாழ்வது அவசியம் ஆகும்.

சுயமரியாதை கொள் தோழா - நீ
துயர் கெடுப்பாய் வாழ்வில் உயர்வு அடைவாயே

(பாரதிதாசன் கவிதைகள், 48.
வாழ்வில் உயர்வு கொள் - 1)

என்னும் வரிகளில் சுயமரியாதை கொண்டவனால் தனது துன்பங்களை வெல்லமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு பிரிவுகளை மனிதர்களிடையே வளர்த்துக் கொண்டு நாம் வாழ்கிறோம். இந்தப் பிரிவுகளால் நமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் பல எழுகின்றன. இக்கருத்து வேறுபாடுகளுடன் வாழும் வாழ்க்கை என்பது வாழ்வு ஆகாது. வேறு எதுதான் உயர்ந்த வாழ்க்கை? என்ற கேள்விக்கு விடையை எதிர்பார்த்து, பாரதிதாசன் நம்மிடம் கேட்கிறார்.

சூழும் நாற்பேதம் தொடர்வது வாழ்வோ?
சுயமரியாதையால் உயர்வது வாழ்வோ?

(பாரதிதாசன் கவிதைகள், 50 ஆய்ந்து பார் - 10)

(**நாற்பேதம்** = நால்வகைச் சாதிபேதம்)

என்று தான் எதிர்பார்க்கும் பதிலைக் கூறச் செய்கிறார். சுயமரியாதையால் உயரமுடியும் என்று தெளிவுபடுத்துகிறார்.

### 4.5 பொது உடைமை

உலக மக்கள் அனைவரும் பகுத்தறிவுடன் சிந்திக்கத் தொடங்கினால் பொது உடைமையை ஏற்றுக் கொள்வார்கள். வலியவர்கள், எளியவர்களை வாட்டும் மனப்பான்மை இல்லாமல் ஒழிய வேண்டும். வறியவன், ஏழை என்னும் நிலை மாற வேண்டும் என்று பாரதிதாசன் சிந்தித்துள்ளார். எனவே,

எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான
இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்

(பாண்டியன் பரிசு, இயல் - 56)

என்று பாடியுள்ளார். இந்த உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் எல்லார்க்கும் பொது என்ற எண்ணம் எல்லாரிடமும் தோன்ற வேண்டும். அவ்வாறு தோன்றினால் ஒருவருக்கு ஒருவர் சுரண்டும் எண்ணம் தோன்றாது.

நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்
நச்சு மனப்பான்மை

தொல்புவி மேல் விழும் பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும்!
. . . . . .
செல்வங்கள் யாவர்க்கும் என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய்

(பாரதிதாசன் கவிதைகள், 44, பேரிகை - 3)

என்னும் பாடலில் வல்லவர்களால் நல்லவர் நாடு அடிமைப்படுத்தப்படக்கூடாது; அவ்வாறு அடிமைப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றால் செல்வம் எல்லாருக்கும் பொது என்று இருக்க வேண்டும் என்கிறார்.

### 4.5.1 பொது உடைமை உலகம்

பொது உடைமையால் உருவாகும் உலகம் போர் இல்லாத புதிய உலகமாக அமையும். அந்த உலகில் அன்பு நிலைத்து இருக்கும். இது என்னுடையது என்று சேர்க்கும் குறுகிய மனப்பான்மை இல்லாமல் போகும் என்கிறார் பாரதிதாசன்.

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுஉடைமைக் கொள்கை திசை எட்டும் சேர்ப்போம்
புனிதமோடு அதை எங்கள் உயிர் என்று காப்போம்
இதயம் எலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது எனது என்னும் ஓர் கொடுமையைத் தவிர்ப்போம்

(பாரதிதாசன் கவிதைகள் 58, புதிய உலகு செய்வோம்)

என்று புதிய உலகு படைக்கப் பாடியுள்ளார் பாரதிதாசன். புதிய

புதிய பொருள்கள் பல படைக்க வேண்டும். அந்தப் பொருள்கள் அனைத்தும் பொதுநலத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உயர்ந்த கருத்தைப் பாரதிதாசன்,

புதுவினை செய்க அஃது
பொதுநலம் ஆதல் வேண்டும்
இதுசெய்க போர்கள் இல்லை
இன்ப நல்லுலகைக் காண்பாய்

(நாள்மலர்கள், பக். 134)

என்று பாடியுள்ளார். இப்படிப்பட்ட தன்மை உலகில் மலர வேண்டும். அவ்வாறு மலர்ந்தால் இன்ப உலகமாக இருக்கும் என்று தெளியலாம்.

### 4.5.2 இல்லாதவர் இல்லை

பொது உடைமை உலகில் இல்லாதவர்கள் என்று யாரும் இருக்கமாட்டார்கள். உணவு இல்லை என்றும் வாழ்வு இல்லை என்றும் யாரும் வருந்தமாட்டார்கள். சரியான நீதியும் நிலைத்திருக்கும் என்ற கருத்தைப் பாரதிதாசன்,

தலையாகிய அறமேபுரி
சரிநீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசு அறைவாய்
இலையே உணவு இலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேல் இலை எனவே முரசு
அறைவாய் முரசு அறைவாய்

(பாரதிதாசன் கவிதைகள், 64, வாளினை எடடா)

என்று பாடியுள்ளார். இந்தக் கருத்தை முரசு அறைந்து எல்லாருக்கும் தெரிவிக்கும்படியாகவும் பாரதிதாசன் தெரிவித்துள்ளார். பகுத்தறிவாளர்கள் நிறைந்த சமுதாயம்தான் பொதுஉடைமையை நோக்கிச் செல்லும் என்னும் சிந்தனை கொண்ட பாரதிதாசன்,

எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக

(பாரதிதாசன் கவிதைகள், வீரத்தாய் காட்சி - 10)

என்று நாட்டு மக்கள் யாவர்க்கும் இந்தத் தேசம் பொதுவானது என்று தெரிவித்துள்ளார். இந்த நாட்டின் உரிமையும் உடைமையும் எல்லார்க்கும் பொதுவானது ஆகும். எல்லார்க்கும் கல்வி, சுகாதாரம் வாய்க்க வேண்டும் என்றும் எல்லாருக்கும் நல்ல இதயம் பொருந்திட வேண்டும் என்றும் பாடியுள்ளார்.

### 4.6 கடவுள் இல்லை

பாவேந்தர் பாரதிதாசன் கடவுள் இல்லை என்னும் கருத்துக் கொண்டவர். தந்தை பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கைகளுக்குக் கவிதைவடிவம் தந்தவர் பாரதிதாசன் ஆவார். கடவுள் இல்லை என்னும் கருத்தைத் தெரிவிக்க விரும்பிய பாரதிதாசன்,

கடவுள் கடவுள் என்று எதற்கும்

கதறுகின்ற மனிதர்காள்
கடவுள் என்ற நாமதேயம்
கழறிடாத நாளிலும்
உடைமை யாவும் பொதுமையாக
உலக நன்று வாழ்ந்ததாம்
கடையர் செல்வர் என்ற தொல்லை
கடவுள் பேர் இழைத்ததே!

(பாரதிதாசன் கவிதைகள், 45 தளை அறு - 1)

(**நாமதேயம்** = பெயர் , **கழறிடாத** = சொல்லிடாத,
**கடையர்** = இழிந்தோர்)

என்று பாடியுள்ளார். கடவுள் பேரைச் சொல்லித்தான் மக்களை ஏழை என்றும் செல்வர் என்றும் ஏமாற்றுகிறார்கள் என்று தெரிவித்துள்ளார் பாரதிதாசன். மேலும், கடவுள் பேரைச் சொல்லாத பழங்காலத்தில் கூட, செல்வங்கள் எல்லாருக்கும் பொதுவாக இருந்தன. ஆனால், இன்று சமுதாயம் ஏற்றத்தாழ்வு நிறைந்தது ஆகிவிட்டது என்கிறார்.

### 4.6.1 கடவுள் ஆணை இல்லை

வயலில் காலை முதல் மாலை வரை உழைக்கின்ற ஏழை மிகக்குறைவான கூலியைப் பெறுகிறான். ஆனால், உடல் உழைப்பு இல்லாதசெல்வர்கள் உலகச் செல்வங்களை எல்லாம் தங்களுடையது ஆக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு ஏழைகள் மேலும் ஏழை ஆவதும், செல்வர்கள் மேலும் செல்வர்கள் ஆவதும் கடவுளின் ஆணை இல்லை என்பதையும் பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

நடவு செய்த தோழர் கூலி

நாலணாவை ஏற்பதும்
உடல் உழைப்பு இலாத செல்வர்
உலகை ஆண்டு உலாவலும்
கடவுள் ஆணை என்று உரைத்த
கயவர் கூட்டம் மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்

(பாரதிதாசன் கவிதைகள், 45 தளை அறு - 5)

என்னும் வரிகளில் கடவுள் என்னும் கருத்துருவை இல்லாமல் ஆக்குவதற்குத் தொழிலாளர்களை ஏவுதல் வேண்டும் என்கிறார் பாரதிதாசன். கடவுளை நம்பும் மக்கள் தங்களுக்குள் அடித்துக் கொள்கிறார்கள். ‘உன் கடவுள் தாழ்ந்தவன்; என் கடவுள் உயர்ந்தவன்’ என்று இல்லாத கடவுளைச் சொல்லிச் சண்டை போடுகிறார்கள். இவ்வாறு தங்களுக்குள் சண்டை ஏற்படுத்தும் கடவுளை ஒழிக்க வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.

பிணக்கு ஏற்படுத்தும் கடவுளைக்
கணக்குத் தீர்த்தல் மனிதர் தம் கடமையே

(நாள் மலர்கள், பக். 121)

என்று கடவுளுக்குக் கணக்குத் தீர்ப்பது மனிதரின் கடமை என்கிறார்.

### 4.6.2 தன்னம்பிக்கையே கடவுள்

மக்கள் தொடர்ந்து கடவுளை வணங்கி வருகிறார்கள். ஆனாலும் அவர்கள் வறுமையால் வாடுகிறார்கள். இவர்களது வறுமையைக்

கடவுள் ஏன் போக்கவில்லை என்ற கேள்வியை மக்களிடையே பாரதிதாசன் தொடுக்கின்றார்.

**தன்னைக் காக்கத் தெரியாக் கடவுள்**
**தன்னை நம்பிய மக்களைக் காத்ததா?**

(நாள் மலர்கள், பக். 121)

என்று கடவுளால் தன்னையே காத்துக் கொள்ள இயலவில்லை. அவரால் எப்படி அவரை நம்பும் மக்களைக் காப்பாற்ற முடியும்? என்று பாரதிதாசன் கேட்கிறார். இதன்மூலம் மக்கள் தன்னம்பிக்கை உடையவர்களாக வேண்டும் என்று எண்ணியுள்ளார்.

### 4.6.3 தமிழ் வளர்ச்சிக்குப் பகுத்தறிவு

தமிழ்மொழி கரும்பைப் போல் இனிமையானது: எல்லாருக்கும் பொதுவானது. தமிழ்மொழி ஒரு மதத்திற்கு மட்டும் உரிய மொழி அல்ல. எனவே, சமயவெறிக் கருத்துகள் தமிழ்மொழிக்கு இழிவைத் தரும் என்று பாரதிதாசன் கருதியுள்ளார், இதை,

**கடவுள்வெறி சமயவெறி**
**கன்னல் நிகர் தமிழுக்கு**
**நோய்! நோய்! நோயே!**

(தமிழியக்கம் - 24)

என்று பாடியுள்ளார். கடவுள் நம்பிக்கையும் சமயநெறியும் தமிழ் மொழியில் பிறமொழி கலப்பதற்குக் காரணமாய் அமைந்துவிட்டன என்ற கருத்தைப் பாரதிதாசன் இந்த வரிகளில் தெரிவித்துள்ளார்.

## 4.7 தொகுப்புரை

அறிவுகொண்ட சமுதாயமாய் உலக மக்களைக் காண விரும்பியவர் பாரதிதாசன். இந்தச் சமுதாயத்தின் அறிவுக்குத் தடையாய்ச் சாதியும் மதமும் விளங்குவதைக் கண்டார் பாரதிதாசன். எனவே, அவற்றைத் தமது கவிதைகள் வழியாக விரட்டியடிக்க எண்ணிப் பாடியுள்ளார்.

மதவாதிகள் மக்களின் உழைப்பையும் பணத்தையும் கடவுளைக்காட்டி, சுரண்டுவதைப் பாரதிதாசன் தமது கவிதைகளில் கண்டித்துள்ளார்.

மக்கள் பகுத்தறிவை இழந்து வாழ்வதற்கு அடிப்படைக் காரணம் அவர்களின் மூடநம்பிக்கை ஆகும். இந்த மூடநம்பிக்கை மக்களை விட்டு ஓடுவதற்குப் பாரதிதாசன் பாடியுள்ளார்; நல்ல நம்பிக்கையை மக்கள் மனங்களில் விதைத்துள்ளார்.

மக்கள் வாழ்க்கையின் பச்சை விளக்காக விளங்குவது பகுத்தறிவு. இந்தப் பகுத்தறிவின் துணையுடன் வாழ்வில் உயரலாம் என்று அவர் உணர்த்தியுள்ளார்.

மனிதன் தனது மதிப்பை உணர்ந்து வாழவேண்டும் என்று பாரதிதாசன் சுயமரியாதைச் சிந்தனையைத் தூண்டியுள்ளார்.

பகுத்தறிவாளர்கள் நிறைந்த சமுதாயம் பொதுவுடைமைச் சமுதாயமாய் மலரும் என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். பகுத்தறிவுக்குத் தடையாய் விளங்கும் கடவுள் நம்பிக்கையைத் தகர்க்கக் கருதிய பாரதிதாசன் கடவுள் இல்லை என்று பாடியுள்ளார்.